இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

விழுவது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 9.10.2026

எகிறும் விலைவாசி... குறையும் வாங்கும் சக்தி

பொதுமக்களின் அன்றாடத் தேவைகளான பல்வேறு பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகமாகி வருகின்றன. ஆனால் அதைப் பற்றி எல்லாம் விஜய் அரசு கவலைப்படவில்லை. 'நமக்கும் அதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை' என்று இருக்கிறார் முதலமைச்சர் விஜய்.

தமிழ்நாட்டில் அரிசி, பருப்பு விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. கடந்த ஓரிரு மாதமாக அனைத்து உணவுப் பொருட்களின் விலையும் உயர்ந்து வருகிறது. ஒரு மூட்டை அரிசி விலை 300 ரூபாய் முதல் 600 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. அனைத்து வகை அரிசி விலையும் உயர்ந்துவிட்டது. 1400 ரூபாய்க்கு விற்கப்பட்ட டீலக்ஸ் பொன்னி அரிசி 1800 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகளே சொல்கிறார்கள். 1900 ரூபாய்க்கு விற்கப்பட்ட வெள்ளைப் பொன்னி அரிசி 2300 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. அரிசி விலை கடந்த நான்கு மாதத்தில் நான்காவது முறையாக உயர்ந்துள்ளது.

அதே போல் பருப்பு விலையும் உயர்ந்துள்ளது. துவரம் பருப்பு, உளுந்தம்பருப்பு, பாசிப்பருப்பு, கடலைப் பருப்பு என அனைத்து பருப்புகளின் விலையும் உயர்ந்துள்ளது. ஒரு கிலோ துவரம் பருப்பு 132 ரூபாயில் இருந்து 142 ரூபாயாக உயர்ந்துள்ளது. உளுந்து கிலோ 120 ரூபாயில் இருந்து 127 ரூபாய் ஆகி இருக்கிறது. கடலைப்பருப்பு 83 ரூபாயிலிருந்து 93 ரூபாய் ஆகி இருக்கிறது. பாசிப்பருப்பு 98 ரூபாயிலிருந்து 110 ரூபாய் ஆகி இருக்கிறது.

அரிசி ஆலைகளில் நெல் கையிருப்பு குறைந்துள்ளதால் அரிசி விலை மேலும் உயரும் என்று சொல்கிறார்கள். தீபாவளி, அதை அடுத்து வரும் பொங்கல் திருவிழா தினங்களில் அரிசி விலை மிகமிக அதிகம் ஆகும் என்றும் சொல்லப்படுகிறது.

மிளகாய் விலை அதிகம் ஆகி இருக்கிறது. சர்க்கரை, வெல்லம் விலை அதிகம் ஆகி இருக்கிறது. முந்திரிப்பருப்பு விலை உயர்ந்துள்ளது. சீரகம் விலை கிலோவுக்கு 50 ரூபாய் அதிகம் ஆகி இருக்கிறது. சமையல் எண்ணெய்கள் அனைத்தும் லிட்டருக்கு 20 ரூபாய் அதிகம் ஆகி உள்ளது.

தக்காளி, வெங்காயம் ஆகியவற்றின் விலை 30 விழுக்காடு உயர்ந்துள்ளது.

பால் விலை உயர்ந்துள்ளது. அதை விட முக்கியமாக ஆவின் பால் கிடைக்கவே இல்லை. தினந்தோறும் காலையில் ஒவ்வொரு கடை வாசலிலும் 'பால் இல்லை' என்ற தகவலால் கொந்தளித்துக் கொண்டு இருக்கிறார்கள் மக்கள்.

அன்றாடச் சமையலுக்கே விழிபிதுங்கி நிற்கிறார்கள் மக்கள். விலைவாசி உயர்வுக்கு என்ன காரணம் என்பதை ஆராயக் கூட, அதைக் கட்டுப்படுத்தும் ஆலோசனையில் இறங்கக் கூட விஜய் அரசு முயற்சிகள் எடுக்கவில்லை. தினந்தோறும் ரெண்டு ரீல்ஸ் போட்டால் போதும் என்று முதலமைச்சரும் அவரைச் சுற்றி இருப்பவர்களும் நினைக்கிறார்கள்.

கொள்முதல் நிலையங்களில் நெல் மூட்டைகள் தேங்கிக் கிடக்கின்றன. கொள்முதல் செய்யப்பட்ட நெல்மூட்டைகளை குடோன்களுக்கு அனுப்பாமல் வைத்துள்ளார்கள். சில இடங்களில் கொள்முதல் செய்ய மறுக்கிறார்கள் என்றும் விவசாயிகள் புகார் சொல்லி வருகிறார்கள். அரிசி விலை உயர்வுக்கு இதுவும் ஒரு காரணம் ஆகும்.

அரிசி விலை உயர்வு. பருப்பு விலை உயர்வு, காய்கறி விலை உயர்வு. எண்ணெய் விலை உயர்வு. பால் விலை உயர்வு. இதுதான் மக்களுக்கு விஜய் தந்துள்ள பரிசுகள். இவை அனைத்தையும் மிஞ்சியது மின்வெட்டு. இன்னமும் அதைத் தீர்க்க முதலமைச்சரால் முடியவில்லை. மின்சார வாரிய அலுவலகத்துக்குச் சென்று அங்குள்ள தகவல் பலகையை உற்றுப் பார்த்து போட்டோவுக்கு போஸ் கொடுத்தாரே தவிர, எங்கும் மின்வெட்டு தொடரவே செய்கிறது. இப்படி அனைத்து மக்களுக்கும் தொல்லை தரும் அரசாக, அவர்களது துன்ப துயரங்கள் பற்றி கவலைப் படாத அரசாகத்தான் விஜய் அரசு இருக்கிறது.

பிறமாநிலங்களை விஞ்சி இரட்டை இலக்க வளர்ச்சியோடு ஜி.எஸ்.டி. வசூலில் சாதனை படைத்த தமிழ்நாடு இப்போது அதிலும் சரிந்துள்ளது. தொடர்ந்து மூன்று மாதங்களாக சரிந்து வருவதை புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. உற்பத்தி முடங்குகிறது என்பதன் அடையாளம் இது.

பொருளும் கிடைக்கவில்லை. கிடைக்கும் பொருளின் விலையும் அதிகமாக இருக்கிறது. மக்களின் வாங்கும் சக்தி குறைந்து வருகிறது. இதுதான் இன்றைய தமிழ்நாட்டின் பொருளாதாரச் சூழல் ஆகும்.

தேசிய சராசரியை விட தமிழ்நாட்டின் பணவீக்கம் திராவிட மாடல் ஆட்சியில் மிகக் குறைவாக இருந்தது. ஆனால் இப்போது தேசிய சராசரியை விட தமிழ்நாட்டின் பணவீக்கம் அதிகம் ஆகிவிட்டது. இந்தியாவின் சில்லறை பணவீக்கம் 4.28 விழுக்காடாக பதிவாகி உள்ளது. தமிழ்நாட்டின் சில்லறைப் பணவீக்கம் 5.92 ஆக பதிவாகி இருக்கிறது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஜனவரி மாதம் தமிழ்நாட்டின் சில்லறைப் பணவீக்கம் 3 விழுக்காடாக மட்டுமே இருந்தது. ஜூன் மாதம் 5.24 ஆனது. ஜூலையில் 5.44 ஆனது. ஆகஸ்ட் மாதத்தில் 5.92 ஆனது. பணவீக்கம் அதிகம் ஆவது ஒரு ஆட்சியின் மிகமிக மோசமான நிலையையே வெளிப்படுத்துகிறது. அனைத்துப் பொருட்களும் விலை அதிகம் ஆவதன் வெளிப்பாடு இது.

மின் கட்டணம், பேருந்துக் கட்டணம், பால் விலை ஆகிய அனைத்தும் உயர்ந்து போனதன் அடையாளம்தான் சில்லறைப் பணவீக்கம். இது எதைப் பற்றியும் கவலைப்படாமல் சுற்றிக் கொண்டு இருக்கிறார் முதலமைச்சர்.

'எம்.எல்.ஏ.க்கள் ஷாப்பிங்கில்' இருக்கும் முதலமைச்சர் விஜய்க்கு, பொதுமக்களின் 'அன்றாட ஷாப்பிங்' மனதில் இருக்குமா?

●●

திருப்பூர் மாவட்டம் – பாரதி சுப்பராயன் தலைமையில்

நவீன மனிதர்கள் அமைப்பினர் கழகத்தில் இணைந்தனர்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!

திருப்பூர். அக். 9 -

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் திருப்பூர் மாவட்டம் நவீன மனிதர்கள் அமைப்பின் தலைவர் பாரதி சுப்பராயன் தலைமையில் நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.



கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (08.10.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நவீன மனிதர்கள் அமைப்பின் தலைவர் பாரதி சுப்பராயன் தலைமையில், அமைப்பின் துணைத் தலைவர் அரவிந்தன், செயலாளர் வி. சுரேஷ், பொருளாளர் ஆர். பிரகாஷ் சந்திரன், துணை பொருளாளர் எ. செந்தில்குமார், துணைச் செயலாளர்கள் ராஜா, சி. ஜேம்ஸ், தமிழ்செல்வன், சிவசந்திரன், மற்றும் ஒருங்கிணைப்பாளர் அருண்குமார் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா, திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் தினேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

நவீன மனிதர்கள் அமைப்பின் சார்பில் தி.மு.க.வில் இணைவதற்கான காரணங்கள் அடங்கிய வாசகங்களை கழகத் தலைவர் அவர்களிடம் வழங்கினார்கள்.

அதில் இடம்பெற்றுள்ள வாசகங்கள் வருமாறு:-

- இதுவரை உள்ள 18 இந்தியப் பிரதமர்களில் இரண்டே பேர்தான் திராவிடர்கள். இந்த ஆரிய ஆதிக்கத்தை நிறுத்த!
- 3% மட்டுமே உள்ள பார்ப்பனர்கள் எல்லா உயர் அதிகாரப் பதவிகளிலும் 70%க்கு மேல் ஆக்ரமித்திருப்பது எப்படி? இதைச் சீர்படுத்த!
- மனித இனம் தோன்றி 3 லட்சம் ஆண்டுகளாகியும் சமத்துவம் இல்லையே! அதை நோக்கிப் பயணிக்க...!
- அம்மாவாக, அக்காவாக, மனைவியாக இருந்தாலும் பெண்களுக்கு முழு அதிகாரம் கிடைப்பதில்லையே... அதைச் செயல்படுத்த...!
- தமிழ்நாடு கொடுக்கும் 1 ரூபாய்க்கு 29 காசு மட்டும் திருப்பிக் கொடுக்கிறது ஒன்றிய அரசு. அதைக் கேள்வி கேட்க!
- இன்றும் தூய்மைப் பணியாளர்களில் ஒடுக்கப்பட்ட சாதியினரே அதிகம். இந்த மூவாயிரமாண்டு சாதி இழிவைப் போக்க!
- நவீன GenZக்கள் கூட திரையில் தம் தலைவர்களைத் தேடுகிறார்களே... அந்தத் திரைமோகத்திலிருந்து அவர்களை மீட்டு வழி காட்ட...!
- சமூக நீதி = அனைவருக்கும் அனைத்தும் பெரியார்
- தமிழன் யாருக்கும் தாழாமல், யாரையும் தாழ்த்தாமல், யாருக்கும் அடிமையாக இல்லாமல், யாருக்கும் எஜமானனாக இல்லாமல் யாரையும் சுரண்டாமல், யாராலும் சுரண்டப்படாமல் நல்வாழ்வு வாழவேண்டும் என்பதே என் குறிக்கோள். **- அண்ணா**
- அடிமையாக இருப்பவன் தனக்குக் கீழே ஓர் அடிமை இருக்க வேண்டும் என்று கருதினால், உரிமைகளைப் பற்றிப் பேச அவனுக்கு உரிமையே கிடையாது - **கலைஞர்**
- திராவிட மாடல் என்பது எதையும் இழக்காது - உருவாக்கும்.

  எதையும் சிதைக்காது; சீர் செய்யும்.

  யாரையும் பிரிக்காது; அனைவரையும் ஒன்று சேர்க்கும்

  யாரையும் தாழ்த்தாது; அனைவரையும் சமமாக நடத்தும்.

  யாரையும் புறக்கணிக்காது; தோளோடு தோள் நின்று அரவணைக்கும்!

  - மு.க. ஸ்டாலின்
- **வெற்றியின் போது பதவிக்காக இல்லை - தோல்வியின் போது தோள் கொடுக்க!**

ஆகிய வாசகங்கள் அப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.

தள்ளுபடி செய்யப்பட்ட மாணவர்களின்

கல்விக் கடனை திரும்பச் செலுத்தக் கோரி நோட்டீஸ் அனுப்புவதா?

புதுச்சேரி அரசுக்கு தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா கண்டனம்!

புதுச்சேரி, அக். 9-

புதுச்சேரி அரசின் பிற்படுத்தப்பட்டோர் மேம்பாட்டுக் கழகத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட கல்விக்கடனை வட்டியுடன் திருப்பிச் செலுத்தக் கூறி ரகசியமாகப் பெற்றோர்களுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளதை கண்டித்துள்ள தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா, மாணவர்களுக்கு அனுப்பப்பட்ட நோட்டீசை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக அவர் கள் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

புதுச்சேரி மாநிலத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையின மக்களின் பொருளாதார மற்றும் கல்வி நிலையை மேம்படுத்துவதற்காக புதுச்சேரி அரசு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழகம் துவங்கப்பட்டது. இலாப நோக்கமற்ற அரசு நிறுவனமாக பதியப்பட்டுள்ள இந்நிறுவனத்தில் சுயதொழில் துவங்க, சிறுவணிகங்களை மேம்படுத்த குறைந்த வட்டி விகிதத்தில் நிதியுதவிகள் மற்றும் கல்விக் கடன்கள் வழங்கப்பட்டன. இப்படி வழங்கப்படும் நிதியுதவி மற்றும் கடன்களுக்கு தேவையான நிதி ஆதாரம் ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் தேசிய நிதிக்கழகங்கள் வாயிலாக சுழற்சி முறையில் பெறப்படுகிறது.

அப்படி பெறப்படும் நிதியை மாநில அரசாங்கம் தகுந்த நேரத்தில் திருப்பிக் கொடுத்து நிதி ஆதாரத்தை பெற்று வந்தால் மட்டுமே கழகம் பிற்படுத் தப்பட்டோர், சிறு பான்மையின மக்களின் பொருளாதார மற்றும் கல்வி நிலையை மேம்படுத்த முடியும். மேலும் கல்விக் கடன்கள் மாநில அரசால் ரத்து செய்யப்படும் என்று அறிவித்தால் கூட அதற்கான அசல் மற்றும் வட்டியை அரசு கழகத்திற்கு செலுத்த வேண்டும். அப்போது தான் மேம்பாட்டு கழகத்திற்கு நிதி



தடையின்றி கிடைக்கும்.

அந்த வகையில் 2021ம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற முதல்வர் ரங்கசாமி அவர்கள் சட்டப்பேரவையில் எதிர்க்கட்சிகள் முன்வைத்து கோரிக்கையை ஏற்று பிற்படுத்தப்பட். டோர் மேம்பாட்டுக் கழகத்தில் பல்வேறு நிலைகளில் கல்விக் கடன் பெற்ற 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் கடன்கள் தள்ளுபடி செய்யப்படுவதாக அறிவித்து, அதற்கான ரூ. 15 கோடி கடன் மற்றும் வட்டித் தொகையை தேசிய நிதிக் கழகத்திற்கு அரசு செலுத்தும் என்று கூறி அரசாணையும் வெளியிடப்பட்டது. இதனால் கல்விக்கடன் பெற்றவர்கள், அவர்களுக்கு ஜாமீன் போட்டவர்கள் எல்லாம் நிம்மதி அடைந்தனர்.

இந்நிலையில் 2013-14ம் ஆண்டு மாணவர்கள் வாங்கிய கல்விக் கடனைத் வட்டியுடன் கணக்கிட்டு 15 நாட்களுக்குள் கட்ட வேண்டும் என்று மேம்பாட்டுக் கழகம் நோட்டீஸ் அனுப்பி இருப்பது பெற்றோர்களுக்கு பெரும் மன உளைச்சலையும், பொருளாதார நெருக்கடியையும் ஏறுபடுத்தி உள்ளது.

சட்டமன்றத்தில் ஒரு கொள்கை முடிவாக அறிவிக்கப்பட்டு, மக்கள் மத்தியில் நற்பெயர் வாங்குவதற்காக விளம்பரம் தேடிக் கொண்ட முதல்வர் ரங்கசாமி தலைமையிலான அரசு, அதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டை செய்யாமல் தவறியது ஏன்?. முதல்வரின் அறிவிப்புக்கு துறை சார்ந்த கழகங்கள் மதிப்பு அளிக்கவில்லையா?. அல்லது மக்களை ஏமாற்றுவதற்காக சட்டமன்றத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்டதா? என்ற கேள்வி தற்போது நோட்டீசை கண்டு எழுகிறது. படித்த இளைஞர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதாகச் சொன்னதை செய்யாமல் அரசு ஏமாற்றுவதை எண்ணியும், படிப்பு முடிந்து இன்னும் முறையான வேலைவாயப்பு கிடைக்காமலும், தங்களது வாழ்வாதாரத்தைத் தேடிக் கொண்டிருக்கும் ஏழை மாணவர்களின் தலையில் தள்ளுபடி செய்த கடனை மீண்டும் வட்டியோடு கட்டுமாறு நோட்டீஸ் அனுப்பி அவர்கள் மீது சுமையைத் திணிப்பது எந்த விதத்தில் நியாயம்?. இத்தகைய நடவடிக்கைகள் மாணவர்களின் எதிர்காலத்தையும், அவர் களது குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும் மிக கடுமையாக பாதிக்கும் என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டாமா?.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின மாணவர்களை ஏமாற்ற நினைக்கும் இந்த இரட்டை வேடப் போக்கை புதுச்சேரி அரசு உடனடியாக கைவிட வேண்டும். மாணவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள அனைத்து நோட்டீஸ்களையும் திரும்பப் பெற வேண்டும். முதல்வர் சட்டமன்றத்தில் அறிவித்தபடி பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழகத்திற்கு தேவையான நிதியை அரசே நேரடியாகச் செலுத்தி, மாணவர்களின் கல்விக் கடன்களை முழுமையாக ரத்து செய்ய உரிய அரசாணையை உடனே வெளியிட வேண்டும். இல்லையேல் பாதிக்கப்பட்ட மாணவர்களை ஒன்று திரட்டி போராட்டம் நடத்த வேண்டி இருக்கும் என்பதை இந்த அரசுக்கு எச்சரிக்கையாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; ஐந்தே மாதங்களில் இரண்டு பேரூராட்சி இயக்குநர்களை மாத்திட்டாங்களாமே. ஏன் அப்படி அடிக்கடி மாத்தராங்க...?

பட்டணம் : **ஆமாமய்யா; கேட்டா நிர்வாகக் காரணம்ன்னு சொல்லுவாங்க. உண்மையான காரணம் என்னன்னா அவங்க நேர்மையா - யாருக்கும் கட்டுப்படாம நடப்பவங்களாம். த.வெ.க.காரர்களுக்கு பொறுக்குமா? அதான் மாத்திட்டாங்க.**